# பத்திரிக்கை செய்தி

சிவகங்கை மாவட்டத்தில் குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் துறையின்கீழ் இயங்கும் அரசினர் பெண் குழந்தைகள் இல்லம் (அன்னை சத்தியம்மையார் குழந்தைகள் இல்லம்), சிவகங்கை மற்றும் காரைக்குடி ஓ.சிறுவயலில் இயங்கும் அரசினர் (ஆண்) குழந்தைகள் இல்லங்களில் தங்கியிருக்கும் குழந்தைகளுக்கு, மதிப்பூதியத்தின் அடிப்படையில் (ஒரு மாதத்திற்கு 9 நாட்களுக்கு மிகாமல்) ஒவ்வொரு அமர்விற்கும் போக்குவரத்து செலவினம் உட்பட **ரூ.1,000/- (ரூபாய் ஆயிரம் மட்டும்)** வழங்கிடும் வகையில் 4 ஆற்றுப்படுத்துநர்கள் நியமனம் செய்திட இருப்பதால், இப்பதவிக்கு தகுதியான உளவியல் மற்றும் ஆற்றுப்படுத்துதலில் முதுகலை பட்டம் பெற்ற நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் உரிய கல்வி சான்றுகளின் ஒளிநகலுடன், கீழ்க்காணும் முகவரிக்கு விண்ணப்பக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

மேற்காணும் பணியிடத்திற்கான விண்ணப்பங்களை கீழ்க்காணும் முகவரிக்கோ அல்லது மாவட்ட ஆட்சியர் அவர்களின் https://sivaganga.nic.in என்ற இணைய தளத்தில் பதிவிறக்கம் செய்து, தாங்கள் விண்ணப்பிக்க விரும்பும் முகவரிக்கு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை நேரடியாகவோ அல்லது அஞ்சல் முலமாகவோ 18 / 7 /2025 அன்று மாலை 05.00 மணிக்குள் கீழ்க்கண்ட முகவரிக்கு வந்துசேரும் வகையில் அனுப்பிவைத்திட தெரிவிக்கப்படுகிறது.

**விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:.**

மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகம்,
கதவு எண்.131, 1வது தளம்,
மாவட்ட ஆட்சியர் வளாகம்,
சிவகங்கை - 630 562.
சிவகங்கை மாவட்டம்.
தொலைபேசி எண். 04575 -240166

மாவட்ட ஆட்சியர்,
சிவகங்கை.

CamScanner